**கவனிக்க.-** *2010.05.07 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (IIஅ) மற்றும் பகுதி I: தொகுதி (III) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*
**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்களம், ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1654 - 2010 මැයි මස 14 වැනි සිකුරාදා - 2010.05.14**

*1654 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 884 | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 884 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மற்றைய நியமனங்களும் பிறவும்

## வடமத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேமநல, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, நன்னடத்தை அதிகாரிகளை நியமிப்பது தொடர்பாக மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை ஆணையாளர் வெளியிடும் அறிவித்தல்

வடமத்திய மாகாணத்தின் சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேமநல, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் தொடர்பான ஆணையாளராகிய கொட்டலபத்த விதானலாகே தம்மிக நாமல் முதுகல ஆகிய நான் 1978 அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்ட 13 வது அரசியல் யாப்புத்திருத்தம் மற்றும் 1987 இலக்கம் 42 க் கொண்ட மாகாண சபைகள் கட்டளைச் சட்டம் மூலமும் 1989 இலக்கம் 12 ஐக் கொண்ட மாகாண சபைகள் கட்டளைச் சட்டம் மூலமும் 1989 இலக்கம் 12 ஐக் கொண்ட மாகாண சபைகள் (பொதுப் பட்டியல் கட்டளைச் சட்டம்) ஆகியவற்றின் மூலமும் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, 1944 ஆம் இலக்கம் 42 ஐக் கொண்ட குற்றமிழைத்தவர்களை நன்னடத்தைக்குட்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் 18(3) வது பிரிவின் கீழ் கீழே பெயர் குறிப்பிடப்படுபவர்கள் வடமத்திய மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைத் திணைக்களத்தின் நன்னடத்தை அதிகாரிகளாக அவர்களது பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தினத்திலிருந்து மீண்டும் அறிவிக்கும் வரை நியமிப்பதாகவும் அவரவர்களின் பெயருக்கு எதிரே தரப்பட்டுள்ள நீதிமன்றத்திற்குரிய வலயங்களில் கடமைகளில் அன்றைய தினத்திலிருந்தே ஈடுபடுவதாகவும் மகிமை பொருந்திய இலங்கை சனநாயக குடியரசிற்கும் சகல இலங்கை மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

| தொடர் இல. | பெயர் | நீதிமன்றப் பிரிவு | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| 01 | அதி உதி சாமசர ரதனமலல இருகல் பண்டாரலாகே வன்னிநாயக ரத்னமலல | அனுராதபுரம் | 2005.09.01 |
| 2. | திருமதி தோன சிறியானி த சில்வா | அனுராதபுரம் | 2002.07.08 |
| 3. | திரு. கபுறுஹாமிகே கருணா கீர்த்திரத்ன | தமுத்தேகம | 2002.09.07 |
| 4. | செல்வி சௌவிரத்ன முதியன்சேலாகே சிறிசேனகே சந்திரா சௌவிரத்ன | கெக்கிராவை | 2009.09.14 |
| 5. | திருமதி அபேசிங்க முதியான்சேலாகே அமரா ஸ்ரீயாணி | கெப்பித்திகொள்ளாவ | 2009.09.01 |
| 6. | திரு. உக்குபண்டாகே தென்னகோன் | பொலன்னறுவை | 2005.09.01 |
| 7. | திருமதி துனமாலகே மேனகா சுபாஷினி ஜெயசேகர | பொலன்னறுவை | 2002.10.16 |

கே. பீ. வீ. டீ. என். முதுகல,
ஆணையாளர்.

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களம்,
வட மத்திய மாகாணம்.

5-288

# மாகாண சபை அறிவித்தல்கள்

## 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் கூறப்பட வேண்டிய 255 ஆம் அதிகாரமாகிய நகர சபை கட்டளைச் சட்டம்

154 ஆவது பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

255 ஆம் அதிகாரமாகிய நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 (13) உட்பிரிவின் ஊடாக குறித்தொதுக்கப்பட்டுள்ள தத்துவத்தின் மூலம் அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய மஹரகம நகர சபையினால் தயாரிக்கப்பட்ட இங்கு கீழ் காட்டப்பட்டுள்ள துணை விதி 2007, யூலை 31 ஆந் திகதி நடைபெற்ற மஹரகம நகர சபை பொதுக் கூட்டத்தில் இலக்கம் 08.1 ஐ கொண்ட பிரேரணையின் மூலம் நிறைவேற்றப்பட்டது. 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் கூறப்பட வேண்டிய நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் அத்துணை விதி மேல் மாகாண முதலமைச்சர் மற்றும் நிதி

மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், மின்சாரம் மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கிறேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம்,
ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி
மற்றும் மாகாண நிருவாகம், மின்சாரம் மற்றும்
எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு, பொருளாதார
மேம்பாடு தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாணத்தின் மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சு அலுவலகம்,
சிராவஸ்தி வளாகம்,
கொழும்பு 7.
2010.

**மஹரகம நகர சபை**

**பிண எரிப்பகங்கள் தொடர்பான துணை விதி**

1. இந்த துணைவிதி மஹரகம நகரசபையின் பிண எரிப்பகங்கள் சம்பந்தமான துணை விதியொன்று அழைக்கப்படும்.

2. நகர சபைக்குரித்தான பிண எரிப்பகங்களில் சடலங்களை எரித்தல், அதற்கு கட்டணங்களை விதித்தல், அறவிடுதல் மற்றும் பிண எரிப்பகங்களை நிர்வகிப்பதற்காக இந்த துணை விதி ஆக்கப்படுகின்றது.

3. நகர சபையின் தவிசாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமின்றி நகரசபைக்குரித்தான பிண எரிப்பகம் ஒன்றில் எந்தவொரு சடலமும் எரிக்கப்படக்கூடாது.

4. மூன்றாவது துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் (இங்கு இதனகத்து விண்ணப்பதாரர் என்று குறிப்பிடப்படுகின்ற) ஆள் ஒருவர் “அ” அட்டவணைக்கமைய தயார் செய்து கொண்ட விண்ணப்பப்படிவத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தவிசாளர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

   (i) உயிரிழந்தவர் வசித்து வந்த கிராம சேவகர் பிரிவின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் அல்லது மஹரகம நகரசபையின் கௌரவ தவிசாளர் அல்லது கௌரவ உறுப்பினர்களினால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் இதற்குப் போதுமானது.

   (ii) உயிரிழந்தவரின் மரணம் தொடர்பில் குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் விசாரணை நடாத்தப்பட்டிருப்பின், விசாரணை நடாத்திய மரண விசாரணை அதிகாரி அல்லது நீதவானினால் பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்யும் சட்டத்தின் 41(உ) பிரிவின் கீழ் சடலத்தை எரிப்பதற்கு அனுமதி வழங்கி வெளியிடப்படும் சான்றிதழ்.

   (iii) உயிரிழந்து பிறந்த குழந்தை ஒன்றின் சடலமாயின் பிறப்பு, இறப்பை பதிவு செய்யும் சட்டத்தின் 43(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் தவிசாளரிடம் பொறுப்பளிக்கப்பட்ட பின்னர் அவை கிடைத்த ஒழுங்கு முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

6. சடலத்தை எரிக்க பொறுப்பேற்பதாயின் அதற்குரிய கட்டணத்தை அறவிட்டு அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரருக்கு வழங்க வேண்டும். குறித்த சடலத்தை பிண எரிப்பக பொறுப்பாளரிடம் கையளிக்க வேண்டிய நேரத்தை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

7. சடலத்தை எரிப்பதற்கு பொறுப்பேற்பதில்லையாயின் அது பற்றி அதற்கு காரணமான விடயங்களுடன் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறியப்படுத்த வேண்டும்.

8. ஒவ்வொரு நாளும் முற்பகல் 7.00 மணி பிற்பகல் 8.00 மணி வரையான காலப்பகுதிக்குள் சடலங்கள் எரிப்பதற்காக பொறுப்பேற்கப்படும்.

9. விண்ணப்பதாரருக்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னர் சடலத்தை பிண எரிப்பாக பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். தாமதித்து கையளிப்பதனால் ஏற்படக்கூடிய அசௌகரியங்கள் தொடர்பில் நகரசபை பொறுப்பு கூற கட்டுப்படுவதில்லை.

10. ஒவ்வொரு பிண எரிப்பகத்திலும் எரிக்கப்பட்ட ஒவ்வொரு சடலங்கள் தொடர்பாகவும் விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், உயிரிழந்தவரின் பெயர், அவர் உயிரிழக்கு முன்னர் வசித்து வந்த முகவரி, விண்ணப்பதாரருக்கும் உயிரிழந்தவருக்கும் இடையிலான உறவு, எரிக்கப்பட்ட நேரமும், திகதியும் போன்ற விபரங்களை பிண எரிப்பக பொறுப்பாளர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

11. சடலம் எரிக்கப்பட்டு 72 மணித்தியாலங்கள் பூர்த்தியடைய முன்னர் சடலத்தின் சாம்பலை வேண்டி நிற்கும் விண்ணப்பதாரர் அல்லது அவரின் பிரதிநிதி அந்த சாம்பலைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சடலம் எரிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் சடலத்தின் சாம்பலை எடுத்துச் செல்லுமாறு விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறியப்படுத்தியதின் பின்னர் அவ்வாறு எடுத்துச் செல்லப்படாத பட்சத்தில் அந்த சாம்பலை எவ்வகையிலேனும் அகற்றுவது சட்டரீதியானதாகும்.

12. பிண எரிப்பக பொறுப்பாளரின் அல்லது தவிசாளரின் அங்கீகாரமின்றி பிண எரிப்பக வளவிற்குள் பிரவேசிப்பது தவறாகும். எவ்வாறாயினும் சடலம் ஒன்றை எரிப்பதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள ஒருவருடன் வரும் ஆள் ஒருவருக்கு அல்லது ஆட்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக கருதப்பட வேண்டும்.

13. பிண எரிப்பக வளவிற்குள் ஒழுங்கை மீறும் வகையில் நடந்து கொள்வது அல்லது பிண எரிப்பக வளவிற்குள் அமைந்துள்ள சபைக்குரித்தான ஆதனங்களுக்கு சேதம் ஏற்படுத்துவது அல்லது பிண எரிப்பக பொறுப்பாளரின் அல்லது அவரின் உதவியாளர்களது கடமைகளுக்கு தடை ஏற்படுத்துவது மற்றும் பிண எரிப்பக வளவிற்குள் அலங்கார நடவடிக்கைகளை செய்வது கூடாது.

14. இந்த துணை விதியின் 12 மற்றும் 13 ஆம் துணை விதியை மீறுவது தொடர்பில் யாராயினும் ஒரு நபர் உரிய நீதிமன்ற தத்துவம் அளிக்கப்பட்டுள்ள நீதின்றத்தினால், குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ரூபா 750 விஞ்சாத தணடப் பணத்திற்கு அவர் உட்படுதல் வேண்டும்.

15. (i) சடலத்தை எரிப்பதற்கு தகுந்த நிலையில் பிண எரிப்பகத்தை பராமரிப்பது தலைவரின் பணியாதல் வேண்டும்.

(ii) பிண எரிப்பகம் ஒன்றை பராமரித்தல் அல்லது புனரமைப்பதற்காக குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்குள் மூடி வைப்பதாயின் அது பற்றிய அறிவித்தலை பிண எரிப்பகத்தில் சகலரும் பார்க்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்துவது தவிசாளரின் பணியாதல் வேண்டும்.

16. சடலங்களை எரிப்பதற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் நகரசபையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் காலத்திற்கு காலம் விதிக்கப்பட முடியும். அவ்வாறு விதிக்கப்படுகின்ற கட்டணங்களை நகர சபை அவசியம் என்று கருதும் சந்தர்ப்பங்களில் திருத்தியமைக்க முடியும். அவ்வாறான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதுபற்றி அரசாங்க வர்த்தமானியில் வெளியிட வேண்டும்.

17. பதங்கள் தொடர்பில் வேறு வரைவிலக்கணங்கள் அவசியப்பட்டாலன்றி -

"சபை" என்பதனால் மஹரகம நகர சபையும்,

"தவிசாளர்" என்பதனால் மஹரகம நகரசபையின் தவிசாளரும்,

‘ "அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்" என்பதனால் தவிசாளரின் தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தத்துவம் அளிக்கப்பட்டுள்ள ஆள் ஒருவரும்,

"பிண எரிப்பக பொறுப்பாளர்" என்பதனால் சபைக்குரித்தான பிண எரிப்பகம் ஒன்றில் பொறுப்பாகராக செயற்படும் பொருட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள ஆள் ஒருவரும்,

‘ ‘சடலம்" என்பதனால், மனிதர் ஒருவரின் பூதவுடல் அல்லது சடலம் ஒன்றின் ஒரு பகுதி அல்லது உயிரிழந்து பிறந்த குழந்தை ஒன்றின் சடலமும் கருதப்படும்.

### "அ" அட்டவணை

### ................ பிண எரிப்பகத்தில் சடலம் ஒன்றை எரிப்பதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-----.
முகவரி :-----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
கிராம சேவகர் பிரிவு :-----.

2. உயிரிழந்தவரின் பெயர் :-----.
வசித்து வந்த முகவரி :-----.
கிராம சேவகர் பிரிவு :-----.
தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

3. உயிரிழந்தவருக்கும், விண்ணப்பதாரிக்கும் இடையிலான உறவு :-----.
4. மரணச் சான்றிதழின் இலக்கமும், திகதியும் :-----.
5. மரணத்தை பதிவு செய்த பதிவாளரின் பெயரும், முகவரியும் :-----.
6. மரணம் இடம்பெற்ற விதம் :-----.
7. மரண விசாரணை நடாத்தப்பட்டிருப்பின் திகதியும் நேரமும் :-----.
8. மரண விசாரணை அதிகாரியின் பெயரும், பதவியும் :-----.
9. மரண விசாரணை அதிகாரியின் தீர்ப்பு :-----.
10. சடலத்தை எரிக்க அங்கீகாரம் வழங்கப்படுகின்றதா என்பது :-----.
11. எரிப்பதற்கு தேவையான திகதியும் நேரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானதும், உண்மையானதும் என்று உறுதி செய்கின்றேன். உரிய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ளன.

......................
விண்ணப்பதாரியின் கையொப்பமும், திகதியும்.

**அலுவலக உபயோகத்திற்கு மட்டும்.**

1. அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்./பின்வரும் காரணங்களின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் வழங்குவதை நிராகரிக்கின்றேன்.

.........................................
.........................................
.........................................

.............................
தலைவர்/ அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :-----.

**தலைவர்/அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்**

1. பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது.
............................. ஆந் திகதி ................. ஆம் இலக்க பற்றுச்சீட்டின் மூலம் ரூபா .............. அறவிடப்பட்டது.

2. அனுமதிப்பத்தரத்தில் கையொப்பமிடுவதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

3. கோரிக்கை நிராகரிக்கப்பட்டமைக்கு காரணமான விடயங்களை உள்ளடக்கிய கடிதத்தில் கையொப்பம் இடுவதற்காக சமர்ப்பிக்கின்றேன்.

.................
எழுதுனரின் கையொப்பம்.

திகதி :-----.

5-211/1

---

**மஹரகம நகர சபை**

மஹரகம நகர சபை எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை ஏற்படுத்துவதும், நிர்வகிப்பதும் வாகனங்களில் இருந்து கட்டணங்களை அறவிடுவதும் பற்றி துணை விதி

1. இந்த துணை விதி மஹரகம நகர சபை அதிகார எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான இடங்களை ஏற்படுத்துவது, அவ்விடங்களில் நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவிடுவது மற்றும் வாகனங்களை நிறுத்தி வைப்பதைக் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதி என்று அழைக்கப்படும்.

2. இதனகத்து தவிசாளர் என்று அழைக்கப்படுகின்ற மஹரகம நகர சபை தவிசாளரினால் அதிகாரப் பிரதேசத்திற்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பது அல்லது நிறுத்தி வைப்பதைத் தடுப்பது அல்லது வரையறுக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஏதேனும் ஒரு வீதியில் அல்லது வீதியொன்றின் பகுதியில் வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் இடத்தை குறிப்பிடுகின்ற அறிவித்தலை அந்த வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் பொதுவானதொரு இடத்திலிருந்து அவதானிக்கக்கூடியவாறு காட்சிப் படுத்தப்பட வேண்டும். அவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட இடங்களிலன்றி வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைத்தல் ஆகாது.

3. துணை விதி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வாகனங்களை நிறுத்துவது அல்லது நிறுத்தி வைப்பது தடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் வாகன சாரதியொருவர்,

(அ) யாராயினும் ஒரு உத்தியோகத்தர் அல்லது அதிகாரியினால் அந்த வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வாகன சமிக்ஞைக்கு அல்லது அறிவித்தலுக்கு அமைய செயற்படுவது அல்லது

(ஆ) அவ்வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் அச்சந்தர்ப்பத்தில் காணப்படுகின்ற ஏதேனும் ஒரு வாகன போக்குவரத்து முறையை உரிய முறையில் பின்பற்றுவது அல்லது

(இ) யாராயினும் ஒரு ஆளுக்கு அந்த வாகனத்தில் இருந்து இறங்குவதற்கு அல்லது அந்த வாகனத்திற்கு ஏறுவதற்கு இடமளிப்பது அல்லது

(ஈ) அந்த வாகனங்களுக்கு பொருட்களை ஏற்றுவது அல்லது அந்த வாகனத்தில் இருந்து பொருட்களை இறக்குவதற்கான பணிக்குத் தேவையான காலத்தை தவிர்த்து அந்த வாகனத்தை வீதியில் அல்லது வீதியின் ஒரு பகுதியில் நிறுத்தி வைத்தலாகாது.

4. தவிசாளரினால் இந்த துணை விதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்று தம்மிடமிருந்தால் அன்றி யாராயினும் ஆள் ஒருவர் வானங்களை நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் வானம் ஒன்றை நிறுத்தி வைத்தலாகாது.

5. துணை விதி 4 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திற்கும் சபையினால் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானித்து வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடுவதன் மூலம் திருத்தியமைப்பதற்கு உட்பட்டு இங்கு "அ" மற்றும் "ஆ" அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும்.

**அட்டவணை - அ**

| | | முதலாவது மணித்தியாலம் அல்லது அதிலொரு பகுதிக்கான கட்டணம் ரூபா சதம் | அதிகரிககும் ஒவ்வொரு மேலதிக மணித்தியாலத் திற்குமான கட்டணம் ரூபா சதம் |
|---|---|---|---|
| (அ) | துவிச்சக்கர வண்டி | 5 0 | 2 0 |
| (ஆ) | மோட்டார் சைக்கிள் | 10 0 | 5 0 |
| (இ) | மோட்டார் கார் | 20 0 | 10 0 |
| (ஈ) | பஸ் அல்லது லொறி | 100 0 | 20 0 |
| (உ) | வான் அல்லது வேறு மோட்டார் வாகனம் | 30 0 | 10 0 |
| (ஊ) | முச்சக்கர வண்டி | 15 0 | 5 0 |

6. தனியாரின் வாகனங்களுக்கு இங்கு அட்டவணை "ஆ" வில் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த அல்லது வருடாந்த அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**அட்டவணை - ஆ**

ஆ. மஹரகம சபையில் பதிவு செய்யப்பட்ட வாடகை வாகனங்களுக்கான அட்டவணையாகும்.

| | நாளொன்றுக்கு ரூபா சதம் |
|---|---|
| முச்சக்கர வண்டி | 20 0 |
| லொறி | 100 0 |
| பஸ், (தனியார், இ.போ.ச.) | 100 0 |
| வாடகை வான் | 75 0 |

7. இந்த துணை விதியின் கீழ் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் அது வழங்கப்படும் போது மோட்டார் வாகனத்தின் அடையாள இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு மட்டும் இது செல்லுபடியாதல் வேண்டும்.

8. இந்தத் துணை விதியின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு ஆளும் அந்த அனுமதிப்பத்திரத்தை வாகனத்திற்கு வெளியே தெரியக்கூடியவாறு வானத்தினுள்ளே இலகுவாக பார்க்கக்கூடியவொரு இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

9. பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள யாராயினும் ஒருவர் கோரி நிற்கும் சந்தர்ப்பத்தில் வாகனம் நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வாகனத்தின் உரிமையாளிடம் அல்லது சாரதியிடம் அந்த மோட்டார் வாகனத்திற்காக வழங்கப்பட்டுள்ள வாகனத்தை நிறுத்தி வைப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சிப்பதற்காக

சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த அனுமதிப்பத்திரத்தை குறித்த உரிமையாளர் அல்லது சாரதி சமர்ப்பித்தல் வேண்டும்.

10. ஏதேனும் ஒரு வாகனத்தை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில், யாதாயினும் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த அல்லது வகையைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் யாராயினும் ஆளொருவர் குறித்த வகுப்பு அல்லது வகையைச் சாராத வாகனம் ஒன்றை அங்கு நிறுத்தி வைத்தல் ஆகாது.

11. வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்திற்கு பிரவேசிக்கின்ற அல்லது அதிலிருந்து வெளியேறுகின்ற வேறு மோட்டார் வாகனங்களுக்கு தடையை ஏற்படுத்தக்கூடிய வகையில் யாராயினும் ஆளொருவர் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் வானகமொன்றை நிறுத்தி வைத்தலாகாது.

12. வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பொது இடமொன்றுக்கு உட்பிரவேசிப்பதற்கும், வெளியேறுவதற்கும் தனித்தனியே பாதைகள் அமைக்கப்பட்டு அது பற்றி அறிவித்தல் அல்லது சமிக்ஞை பலகைகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உரிய பாதையை பயன்படுத்தினாலன்றி வேறு வழிகளினால், மோட்டார் வாகனங்கள் அந்த இடத்திற்கு உட்பிரவேசிப்பது அல்லது வெளியேறுவது கூடாது.

13. சங்கிலி அல்லது கோபுரங்கள் அல்லது சங்கிலிகளும் கோபுரங்களும் அமைக்கப்பட்டுள்ள பொது வாகனங்கள் நிறுத்தும் இடமொன்றில் நிறுத்தப்படும் வாகனங்கள் அனைத்தும் அவை வருகை தரும் ஒழுங்கு முறையில் ஒன்றின் பின் ஒன்றாக ஒரே பக்கத்திற்கு முகத்தையிட்டு நிறுத்தி வைக்கப்படல் வேண்டும்.

14. மோட்டார் வாகனம் நிறுத்தி வைக்கும் பொது இடமொன்றில் வாகனமொன்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் ஆள் எவரும் அந்த வாகனத்தை கழுவுவது மேற்கொள்ளச் செய்தலாகாது.

15. யாராயினும் ஆளொருவர் வாகனங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்திலிருந்து வாகனங்களை அகற்றும் பணிக்காக புதுப்பித்தல் அவசியமாகும் பட்சத்திலன்றி வானகங்களை நிறுத்தி வைக்கும் பொது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனம் ஒன்றில் எவ்வித புதுப்பித்தலையும் செய்தலாகாது.

16. அவ்வாறான புதுப்பித்தலை செய்யும் போது அந்த சந்தர்ப்பத்துடன் தொடர்புடைய காரணிகளை கவனத்தில் கொள்ளும்போது அனாவசியமான ஏதும் சத்தங்கள் வெளிப்படுத்தப்படலாகாது.

17. பொது நிறுத்தும் இடமொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனமொன்றின் சாரதியொருவர் -

(அ) வாகனம் நிறுத்தப்பட்டுள்ள இடத்தை மாற்றுவது அல்லது அந்த நிறுத்தும் இடத்தில் இருந்து வெளியேறும் பணிக்காகவன்றி தமது வாகனத்தின் எஞ்சினை ஸ்ராட் செய்யக்கூடாது.

(ஆ) விபத்தொன்றை தடுப்பதற்கு அல்லது வாகனத்தின் அல்லது அதிலுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளும் பணிக்காவன்றி வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள அபாய எச்சரிக்கை உபகரணங்களை ஒலிக்கக்கூடாது.

18. யாராயினும் ஆளொருவர் வாகனம் நிறுத்தி வைக்கும் பொது இடங்களில் தவறான நடத்தைகளில் அல்லது ஒழுங்கீனமாக அல்லது கஷ்டங்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடந்து கொள்ளலாகாது.

19. அரசாங்கத் திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனம் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட் சபையினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த கட்டணத்தை தவிசாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு செலுத்துவதன் மூலம் காலத்திற்கேற்றவாறு அத்திணைக்களத்திற்கு அல்லது சபைக்கு உரித்தான மோட்டார் வாகனங்களுக்கு மாதாந்த அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

| | | |
|---|---|---|
| (அ) | பஸ் வண்டி அல்லது லொறிக்கு | ரூபா ........................ |
| (ஆ) | மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் கோச் | ரூபா ........................ |
| (இ) | மோட்டடர் சைக்கிள் | ரூபா ........................ |
| (ஈ) | முச்சக்கர வண்டி | ரூபா ........................ |

20. சபை பிரேரணை மூலம் அங்கீகரிக்கப்பட்ட குறித்த வகுப்பினர் உரிய கட்டணங்களை செலுத்திய பின்னர் விடுதலை செய்யப்பட முடியும்.

21. இந்தத் துணை விதிகளில் ஏதேனும் ஒன்றை மீறும் ஆளொருவர் குற்றம் ஒன்றை செய்வதுடன் குறித்த நபர் முறையான அதிகாரமளிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ரூபா 750 ஐ அதிகரிக்காத தண்டப்பணத்திற்கு உட்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தை தொடர்ந்து செய்து வரும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 250 ஆன உச்ச அளவிற்கு உட்பட்டு மேலதிக தண்டப் பணத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் இந்த தண்டப் பணம் பிரதேச சபையின் பொது நிதியில் செலவு வைக்கப்பட வேண்டும்.

22. (i) பதங்கள் தொடர்பில் வேறு வரைவிலக்கணங்கள் அவசியமானாலன்றி இந்தத் துணை விதிகளில் ''தவிசாளர்'' என்பதினால் மஹரகம நகர சபையின் தவிசாளராக கருதப்படுவார்.

(ii) ''பொலிஸ் உத்தியோகத்தர்'' என்பதினால் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு கீழுள்ள பதவியொன்றை வகிக்கும் இலங்கை பொலிஸ் சேவையின் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கருதப்படுவார்.

(iii) ''போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்'' என்பதினால் பொது வாகனம் நிறுத்தும் இடமொன்றில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக தவிசாளர் சார்பாக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆளொருவராக கருதப்படுவார்.

(iv) பதங்கள் தொடர்பில் வேறு வரைவிலக்கணங்கள் அவசியமானாலன்றி இந்த துணை விதிகளில் மோட்டார் கார், மோட்டார் கோச், மோட்டார் சைக்கிள், மோட்டார் வாகனம், லொறி, பஸ், முச்சக்கர வண்டி என்பன மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள வரைவிலக்கணங்களை கொண்டிருக்கும்.

(v) ''வாகனம்'' என்பது, அது இயந்திரங்களினால் அல்லது வேறு விதமாக ஓட்டிச் செல்லப்படுகின்ற போதிலும், தரை மார்க்க போக்குவரத்து ஊடகமாக பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தக்கூடிய ஏதேனும் செயற்கை உபகரணமாக கருதப்படும்.

(vi) ''வாகனம் நிறுத்தி வைக்கும் பொது இடம்'' என்பதனால் மஹரகம நகர சபையில் பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் பெயரிடப்படுகின்ற இடமொன்றாக கருதப்படும்.

''நகர சபை'' என்பதனால் மஹரகம நகர சபை கருதப்படும்.

5-211/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.